# தஞ்சாவூர் மாநகராட்சி

## மாமன்றக் கூட்ட தீர்மான நகல்

| Date of Meeting | Serial Number and subject in the Agenda (ORDINARY MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 28.03.2025 | 323. இம்மாநகராட்சி 2024-2025ம் ஆண்டிற்கான திருத்திய வரவு – செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2025 – 2026 ம் ஆண்டிற்கான உத்தேச வரவு - செலவு திட்ட மதிப்பீடு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** **(ந.க.எண். 00015 / 2024 / பி1)**<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 324. தஞ்சாவூர் மாநகராட்சி வருவாய் பிரிவில் 2025 – 2026 – ஆம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இன வசூல் தொடர்பான பணிகளுக்கு ஆட்டோ விளம்பரம், அறிவிப்புகள், விளம்பர பதாகைகள், PHAMPLETS, STICKERS மற்றும் BULK SMS ஆகியவற்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,50,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** **(ந.க.எண்.18323/2023/எம்சிஏ2)**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 325. தஞ்சாவூர் மாநகராட்சியில் செயல்படும் திலகர் திடல் அம்மா உணவகம் மற்றும் மருத்துவ கல்லூரி அம்மா உணவகத்திற்கு 01.04.2025 முதல் 31.03.2026 வரையிலான காலத்திற்கு அரிசி, பால், கேஸ் சிலிண்டர், மளிகை பொருட்கள், காய்கறிகள் மற்றும் பணியாளர்களின் ஊதிய செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.95 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>** (ந.க.எண்.5245/2015/எம்சிஏ2)<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம். | | |
| 28.03.2025 | 326. | தஞ்சாவூர் மாநகராட்சி வருவாய் பிரிவில் பராமரிக்கப்படும் கோப்புகளை பாதுகாப்பாக வைப்பதற்கு போதிய அலமாரிகள் இல்லாத காரணத்தால் கோப்புகள் காணமல் போகும் நிலை உள்ளது. எனவே வருவாய் பிரிவிற்கு கோப்புகள் வைப்பதற்கு ஏதுவாக புதிதாக பீரோக்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** (ந.க.எண்.2695/2024/எம்சிஏ3)<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 327. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஜீபிடர் திரையரங்க கட்டிடத்திற்கு 24.01.2024 ல் நடைப்பெற்ற பொது ஏலத்தில் திரு.ஏ.ஜோசப் பிரான்சிஸ் என்பவர் ரூ.4,00,00,000/- வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொண்ட நிலையில், தனியரது உயர்ந்தபட்ச கேள்வி தொகை ரூ.6,00,000/-ஐ மாமன்ற தீர்மானம் எண்.581, நாள்.29.02.2024ன் படி உறுதி செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி திரு. ஏ. ஜோசப் பிரான்சிஸ் என்பவரால் 12 மாத வைப்புத்தொகை 26.06.2024 ல் ECS மூலம் ரூ.72,00,000/- செலுத்தப்பட்டுள்ளது. இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.3250/2024/எம்சிஏ3, நாள்.12.03.2024ன் படி 01.03.2024 முதல் மேற்படி கட்டிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி திரையங்கம் கட்டிடம் பழுதடைந்துள்ளதால் இதனை இடித்துவிட்டு புதிதாக இரண்டு திரையரங்குகள் கட்டுவதற்கு அனுமதி பெற தடையின்மை சான்று மாநகராட்சியால் வழங்க கோரப்பட்டது.<br>தஞ்சாவூர் மாநகராட்சி செயல்முறை உத்திரவு ந.க.எண்.3250/2024/எம்சிஏ3, நாள்.12.03.2024-ன்படி இவ்விடத்தை பயன்படுத்திகொள்ள மட்டுமே உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் ஆதலால் இக்கட்டிடத்தை இடித்து புதிதாக இரண்டு திரையரங்குகள் அமைக்க அனுமதி வழங்க இயலாது என இம்மாநகராட்சியால் 14.03.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. | அலுவலக குறிப்பின் படி ரத்து செய்ய தீர்மானிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | அதனடிப்படையில் வருவாய் ஆய்வர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் உதவிப்பொறியாளர் அவர்களது குறிப்பில் மேற்படி ஜீபிடர் திரையரங்க கட்டிடம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளனர். எனவே ஜீபிடர் திரையரங்க கட்டிடம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மாமன்ற தீர்மானம் எண்.581, நாள்.29.02.2024ன் படி திரு.ஏ.ஜோசப் பிரான்சிஸ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தினை ரத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.3250/2024/எம்சிஏ3)</u><br>1. ஜீபிடர் திரையரங்க கட்டிடம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மாமன்ற தீர்மானம் எண்.581, நாள்.29.02.2024ன் படி திரு.ஏ.ஜோசப் பிரான்சிஸ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தினை ரத்து செய்யலாம். | |
| 28.03.2025 | 328. தஞ்சாவூர் மாநகராட்சியில் Centralised Web Based System முறையில் 2024 - 2025 ஆண்டு கணக்குகளை Online-ல் ஏழு இலக்க கணக்கு முறையில் தனியார் (Consultant) மூலம் தயாரித்து தணிக்கையில் ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்கவும், இம்மாநகராட்சியில் 2025 – 26 ம் ஆண்டில் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றை உரிய காலத்தில் அரசு துறையில் தாக்கல் செய்து ஒப்படைக்கவும் EPF மற்றும் ESI ஆகிய இனங்கள் குறித்து சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் செலுத்த வேண்டிய தொகை மற்றும் விவரங்களை ஒருங்கிணைப்பு செய்திடவும் தனித்தனியாக Consultant ஆலோசகர் நியமனம் செய்திடவும் அதற்கான ரூ. 10,00,000 உத்தேச செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.2289/2025/பி1)</u><br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. செலவினை பொது நிதியில் மேற்கொள்ளலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 28.03.2025 | 329. | தஞ்சாவூர் மாநகராட்சி ஓய்வூதியம் பெற்று வரும் 173 நபர்களில் 7 நபர்கள் கணவர் மற்றும் மனைவியர் (Spouse Covered) போக மீதமுள்ள 166 நபர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் 51 நபர்களில் 9 நபர்கள் பணிபுரிபவர்கள் (Employee) போக மீதமுள்ள 42 நபர்கள் கூடுதல் 208 நபர்களுக்கு புதிய காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். மேற்படி 208 நபர்களுக்கும் ஒரு நபர் வீதம் ரூ.5472/- மற்றும் 18% GST ரூ.985/- கூடுதல் ரூ.6457/- வீதம் 208 நபர்களுக்கு<br>ரூ. 13,43,056/- ஐ கோட்ட மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__ __(ந.க.எண்.11660/2018/பி2)__<br>1. ஓய்வூதியதாரர்களின் வயது மூப்பை கருத்தில் கொண்டு உரிய காலத்திற்குள் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டி வரவு செலவு திட்டம் 2024 – 2025 தலைப்பின் எண் 376045 கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் இருந்து செலுத்தலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 330. | தஞ்சாவூர் மாநகராட்சி 2023 – 2024 ஆம் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__ (ந.க.எண்.7107/2024/சி2)<br>1. பதிவு செய்யலாம். | பதிவு செய்ய தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 331. | தஞ்சாவூர் மாநகராட்சி பொதுசுகாதார பிரிவு பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள் 21.03.2025 முதல் நேரடியாக விண்ணப்பதாரர்களின் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பும் சேவை துவக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 2025 – 2026 ஆம் நிதியாண்டில் அஞ்சல் மூலம் சான்றிதழ் அனுப்புவதற்கும் மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும், தபால் அனுப்புதவற்கும் தபால் தலை மற்றும் தபால் உறை கட்டணத்திற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ற்கு (ரூபாய் ஒரு லட்சத்திற்கு மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u> (ந.க.எண். 3700/2025/சி3)<br>1. அனுமதி வழங்கலாம். | | |
| 28.03.2025 | 332. | தஞ்சாவூர் மாநகராட்சி 2025 – 2026 ம் ஆண்டிற்கு தேவையான வகையில் எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், டோனர் வகைகள் போன்ற இதர பொருட்கள் மாவட்ட மாநில அரசு ஊழியர்கள், நுகர்வோர், கூட்டுறவு பண்டகசாலை தஞ்சாவூர் நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவீனம் ரூ. 20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.<br>அலுவலக குறிப்பு (ந.க.எண்.3415/2024/டி1)<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 333. | தஞ்சாவூர் மாநகராட்சியில் தினசரி நாளிதழ்கள் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கு அறிவுசார் மையத்திற்கும் மாநகராட்சி அலுவலகத்திற்கும், வாசகர் சாலைகளுக்கு மற்றும் குடியிருப்புகளுக்கும் தினசரி நாளிதழ்கள் வழங்குவதற்கான உத்தேச செலவீனம் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவல ககுறிப்பு</u> <u>(ந.க.எண்.6370/2023/டி1)</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 334. | தஞ்சாவூர் மாநகராட்சியில் 2025 – 26 ம் ஆண்டுக்கு (01.04.2025 முதல் 31.03.2026 வரை) செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் பொது நிதி பணிகள் குறித்த விபரங்களை தொழில்மலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.3682/2025/எம்சிஇ1)</u><br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td>28.03.2025</td>
<td>335.</td>
<td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 5 இடங்களில் புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.21616/2024/SS2 நாள். 17.03.2025-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் கீழ்கண்டவாறு உள்ள 5 எண்ணிக்கையிலான புதிய அங்கன்வாடி மையக்கட்டிடங்கள் கட்டும் பணிக்கு ஒரு கட்டிடத்திற்கு ரூ.17.00 இலட்சம் வீதம் 5 கட்டிடங்களுக்குரூ. 85,00,000/- இலட்சத்திற்கு (ரூபாய் எண்பத்தைந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகைரூ. (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.01 கிருஷ்ணாபாட சாலை பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி</td><td>17.00</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண்.04 கீரைக்காரத்தெரு பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி</td><td>17.00</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண்.13 சாலைக்காரத்தெரு பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி</td><td>17.00</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண்.31 மகர்நோம்புசாவடி பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி</td><td>17.00</td></tr>
<tr><td>5.</td><td>வார்டு எண்.31 பங்களாதெரு பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி</td><td>17.00</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>85.00</td></tr>
</table>
</td>
<td>அலுவலக குறிப்பை அனுமதித்து பதிவு செய்திட தீர்மானிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலககுறிப்பு-</u> <u>(ந.க.எண்.1280/2025/எம்சிஇ1)</u><br>
மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.85.00 இலட்சத்திற்கு (ரூபாய் எண்பத்தைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2024-25 ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21616/2024/SS2- நாள்.17.03.2025 மாமன்றத்தின் பார்வைக்கு.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.03.2025</td>
<td>
336. தூய்மை பாரத இயக்கம் (2.0) 2023 - 24 திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்டுள்ள இடங்களில் சமுதாயக்கழிவறை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பகுதியில் பணியினை ஒப்பந்ததாரர் ஆரம்பிக்கும் தருவாயில், மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள சாத்தியக்கூறு இல்லாத காரணத்தினால் பணி ஆரம்பிக்க இயலவில்லை. எனவே பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும், இப்பணியானது திட்டப்பணியாக இருப்பதினாலும் இப்பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் அதே மதிப்பீட்டு விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர்களைக்கொண்டு மாற்று இடத்தில் சமுதாயக்கழிவறை அமைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட இடங்கள்</th><th>புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.28 அழகி குளம்</td><td>வார்டு எண்.15 தென்கீழ் அலங்கம் மாநகராட்சி பள்ளி</td><td>M.சீனிவாசன், தஞ்சாவூர்</td></tr>
</table>
</td>
<td>அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>2.</td><td>வார்டு எண்.16 வி.பி கோயில் சன்னதி தெரு</td><td>வார்டு எண்.51 புதிய பேருந்து நிலையம்</td><td>உ.மங்கை உலகநாதன், தஞ்சாவூர்.</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண்.07 ஏ.ஒய்.ஏ.நாடார் ரோடு மேற்கு தெரு</td><td>வார்டு எண்.45 மருத்துவக்கல்லூரி மருத்துவமனை</td><td>உ.மங்கை உலகநாதன், தஞ்சாவூர்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.12604/2023/எம்சிஇ1)</u><br>
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.03.2025</td><td>337. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள 226 எண்ணிக்கையிலான பவர் பம்புகள் மற்றும் 161 எண்ணிக்கையிலான மினி பவர் பம்ப்புகளில் அவ்வப்போது ஏற்படும் மின்சார கசிவுகளால் மோட்டார்கள் பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ளது. மேலும் தற்போது கோடைக்காலம் துவங்க இருப்பதை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக பழுதடைந்த மோட்டார்களை ரீவைண்டிங் செய்தல், பேனல் போர்டு மாற்றுதல், கேபிள் மாற்றுதல் மற்றும் suction pipe மாற்றி உடனுக்குடன் சரிசெய்து பராமரிப்பு பணிகளை 01.04.2025 முதல் 31.03.2026 வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u> (<u>ந.க.எண். 2138 /2025/எம்சிஇ5</u>)<br>
1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.03.2025 | 338. | தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 செக்கடி உரக்கிடங்கில் பழைய குப்பைகள் உள்ளதால் கோடைக்காலத்தில் அடிக்கடி தீவிபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு மின் மோட்டர் உடன் கூடிய தீயணைப்பு சாதனங்கள் அமைத்து தண்ணீர் தெளித்து தீவிபத்து ஏற்படாமல் தடுக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்புதலுக்கு.<br><br>**அலுவலக குறிப்பு** (ந.க.எண்.3769/2025/எம்சி இ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்ற அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025 – 26 ம் வருடத்திய ஆண்டு பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 339. | தஞ்சாவூர் மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டப்பணிகளின் (2024-25)-ன் கீழ் 1-எண்ணிக்கையிலான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினகரன், திருச்சி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டண தொகை ரூ.15120/-ஐ தினசரி நாளிதழுக்கு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ்களின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | அரசு ராஜா மிராசுதாரர் மருத்துவமனை வளாகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு மின் தூக்கி (LIFT) அமைக்கும் பணி | தினகரன், திருச்சி | 3300537062 / 26.02.2025 | 15120/- |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u> (ந.க.எண்.1505/2025/எம்சிஇ5)<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட விளம்பரக் கட்டணத் தொகையினை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியின் கீழ் வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>3. மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். | |
| 28.03.2025 | 340. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு ஆங்காங்கே குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது. இதனால் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. மேலும் தற்போது கோடைக்காலம் துவங்க இருப்பதை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக அவ்வப்போது பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பராமரிப்பு பணிகளை 01.04.2025 முதல் 31.03.2026 வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு</u> (ந.க.எண்.3688/2025/எம்சிஇ5)<br><br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 28.03.2025 | 341. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள 226 எண்ணிக்கையிலான பவர் பம்புகள் மற்றும் 161 எண்ணிக்கையிலான மினி பவர் பம்ப்புகளில் அவ்வப்போது ஏற்படும் மின்சார கசிவுகளால் மோட்டார்கள் பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ளது. மேலும் தற்போது கோடைக்காலம் துவங்க இருப்பதை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக பழுதடைந்த மோட்டார்களை அகற்றிவிட்டு புதிய மோட்டார்கள் பொருத்தும் பணிகளை 01.04.2025 முதல் 31.03.2026 வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு</u> (<u>ந.க.எண்.3687/2025/எம்சிஇ5</u>)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 342. | தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.29 முதல் 51 வரையிலான பகுதிகளில் உள்ள தலைமை கழிவு நீரேற்று நிலையங்கள் 1 எண்ணம் மற்றும் நீறுந்து நிலையங்கள் 7 எண்ணங்களில் மின் மோட்டர்களை இயக்கவும், மின் மோட்டர்கள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பாதாளசாக்கடை மேன்ஹோல் சில்ட்மண் அகற்றவும், அடைப்பை நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரகம் கடித எண்.23656/2013/டி.ஒ, நாள்.04.02.2016 ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின் படி இம்மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 28.05 MLD கொண்டது. இவற்றில் 12277 ஆழ்இறங்கு குழிகள் மற்றும் 314.38 கி.மீ பாதாள சாக்கடை குழாய்கள் , கழிவுநீர் நீரேற்று நிலைய குழாய்கள் உள்ளது. எனவே மேற்படி திட்டம் செயல்படுத்தும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளை நீக்கவும் சுத்திகரிப்பு நிலையம் கழிவுநீரேற்று நிலையங்கள் | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.58,00,000/- (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** **<u>(ந.க.எண்.2486 /2025/எம்சிஇ5)</u>**<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.58,00,000/- (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 343. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் கனரக வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்களுக்கு 01.04.2025 முதல் 31.03.2026 வரை காப்பீட்டு கட்டணம் செலுத்துதல், பழுது பணிகள் சரிசெய்து தகுதிச் சான்று புதுப்பித்தல், வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சாலைவரி கட்டணம் செலுத்துதல், பசுமைவரி கட்டணம், மற்றும் அனைத்து வகையான பழுதுகள் மற்றும் சர்வீஸ் பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.45,00,000/-க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** **<u>(ந.க.எண். 4142 /2024/எம்சிஇ5)</u>**<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.45,00,000/-க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 28.03.2025 | 344. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 51 வரை பொறியியல் பிரிவு தொடர்பாக குடிநீர் பழுதுகள், பாதாள சாக்கடை கழிவுநீர் அகற்றுதல், தெருவிளக்கு எரியாமல் இருப்பது, மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல், சாலை சீரமைத்தல், பழுதடைந்த கட்டிடத்தை சீரமைத்தல் மற்றும் பல்வேறு குறைபாடுகளை சரிசெய்யக்கோரி தினசரி செய்தித்தாள்களில் வரப்பெறும் குறைபாடுகளை பொதுமக்கள் நலன்கருதியும் மற்றும் நிர்வாக நலன்கருதியும் 01.04.2025 முதல் 31.03.2026 வரை உடனுக்குடன் சரிசெய்வதற்கு ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>அலுவலக குறிப்பு (ந.க.எண்.3686 /2025/எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 345. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள பாதாள சாக்கடை ஆழ் இறங்கு குழிகளில் உள்ள Man Hole Cover உடைந்தும் மற்றும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளால் கழிவுநீர் வெளியேறி சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உருவாகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி பகுதிகளில் பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை ஆழ்இறங்கு குழிகளை 01.04.2025 முதல் 31.03.2026 வரை உயர்த்தி கட்டும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலக குறிப்பு</u>** (ந.க.எண். 3685 /2025 /எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.20,00,000/-க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 346. | தஞ்சாவூர் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகள் பழுதடைந்து எரியாமல் உள்ளதால் பணிகள் மேற்கொள்வதற்கு இயலாத நிலையில் உள்ளது. எனவே நிர்வாக நலன்கருதி மேற்படி அலுவலக கட்டிடத்தில் பழுதடைந்து ஒளிராமல் உள்ள விளக்குகளை சரிசெய்தும் மற்றும் புதிதாக விளக்குகள் பொருத்துவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** (ந.க.எண்.3683 /2025/எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26 ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 347. | தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.1 முதல் 28 வரையிலான பகுதிகளில் உள்ள தலைமை கழிவு நீரேற்று நிலையங்கள் 4 எண்ணம் மற்றும் நீருந்து நிலையங்கள் 9 எண்ணங்களில் மின் மோட்டர்கள் இயக்கவும், மின் மோட்டர்கள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பாதாளசாக்கடை மேன்ஹோல் சில்ட்மண் அகற்றவும், அடைப்பை நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரகம் கடித எண்.23656/2013/டி.ஒ, நாள்.04.02.2016 தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின் படி இம்மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 28.05 MLD கொண்டது. இவற்றில் | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | 12277 மனித ஆழ்இறங்கு குழிகள் மற்றும் 314.38 கி.மீ பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் நீரேற்று நிலைய குழாய்கள் உள்ளது. எனவே மேற்படி திட்டம் செயல்படுத்தும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளை நீக்கவும் சுத்திகரிப்பு நிலையம் கழிவுநீரேற்று நிலையங்கள் மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.37,00,000/- (ரூபாய் முப்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>__அலுவலக குறிப்பு__ (__ந.க.எண்.2400 /2025/எம்சிஇ5__)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.37,00,000/- (ரூபாய் முப்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 348. | தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.25க்குட்பட்ட நாகமரசந்து, தத்தோஜியப்பா சந்து, சாமந்தான் குளம் நான்கு கரைகள், கொத்தன் சந்து, கிருஷ்ணபிள்ளை சந்து, பொன்னையா பிள்ளை சந்து, அரசரமர லாயம், சுல்தான்ஜியப்பா சந்து, மாட்டு மேஸ்திரி சந்து, போகிலெட்சுமண நாயக்கன் சந்து, வரகப்பையர் சந்து, மண்டபம் சந்து, அண்ணாப்பிள்ளை சந்து, மணிகண்டேஸ்வரர் கோயில் சந்து, தட்சிணாபொடி சந்து மற்றும் சேதுபாவா சந்து (சாமந்தான் குளம் சந்து) ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த பேவர் பிளாக் சாலைகளை சீரமைத்து தரும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>__அலுவலக குறிப்பு__ (__ந.க.எண். 3681/2025/எம்சிஇ5__)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 349. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 39 அண்ணா நகர் 20 வது தெருவில் மழைநீர் செல்லும் வாய்க்காலில் குப்பைக் கொட்டுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் வண்ணம் உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதியும் மற்றும் மழைநீர் வடிகாலில் தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக சிறுபாலத்தின் மேல் கம்பி வேலி அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 58,000/-க்கு (ரூபாய் ஐம்பத்தி எட்டாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>அலுவலக குறிப்பு (ந.க.எண். 2827/2025/எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ. 58,000/- (ரூபாய் ஐம்பத்தி எட்டாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 350. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.39 பூக்கார விளார் பிரதான சாலையில் கடந்த மாதம் மாரிக்குளம் இடுகாடு அருகில் பாதாள சாக்கடை பிரதான குழாயில் (800mm Dia) உடைப்பு ஏற்பட்டு சாலை சுமார் 30 மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்துள்ளது. எனவே அப்பகுதியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதால் அப்பகுதியில் உள்ள சாலையானது மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து செல்வதற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி சேதமடைந்த சாலையினை சீரமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6,00,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>** (**<u>ந.க.எண்.3476/2025/எம்சிஇ5</u>**)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6,00,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 351. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.37 முனியாண்டவர் காலனி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் இருந்து மேற்படி பகுதி மக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடிநீரை குளோரினேசன் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டியது அவசியம் என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும், முனியாண்டவர் காலனி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு புதிதாக AUTOMATIC VACUUM FEED GASCHLORINATOR (2KG/Hr) வாங்கி கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.6,10,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** (**<u>ந.க.எண்.14322/2024 /எம்சிஇ5</u>**)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6,10,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 352. நமக்கு நாமே திட்டப்பணிகள் 2024-25ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19731/2024/P2, நாள்.06.02.2024ன்படி, தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டவாறு 2 எண்ணிக்கையிலான பணியினை மேற்கொள்வதற்கு ரூ.53.00/- இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பத்தி மூன்று இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. | பதிவு செய்திட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>\| வ. எண் \| பணியின் பெயர் \| மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் \| மானியத் தொகை ரூ. இலட்சத்தில் \| பங்களிப்பு தொகை ரூ. இலட்சத்தில் \|<br>\|---\|---\|---\|---\|---\|<br>\| 1. \| வார்டு எண்.48 முனிசிபல் காலனி பகுதியில் புதிதாக நிழற்குடை அமைக்கும் பணி \| 3.00 \| 1.50 \| 1.50 \|<br>\| 2. \| வார்டு எண்.06 இராஜகோரி சுடுகாட்டில் பழுது பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் \| 50.00 \| 33.33 \| 16.67 \|<br>\| \| கூடுதல் \| 53.00 \| 34.83 \| 18.17 \|<br><br>**அலுவலக குறிப்பு**:- **(ந.க.எண்.1505/2025/எம்சிஇ5)**<br><br>1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| 28.03.2025 | 353. | தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகம் முன் பக்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க "தமிழ் வாழ்க" என்ற பெயர் பலகையை 201"x36" அளவில் வைப்பதற்கும் மற்றும் மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி "தமிழ் வாழ்க" Computerized contour type Channel Letter's ல் வைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,20,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) 21.01.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கு.<br><br>\| வ. எண் \| ஒப்பந்ததாரரின்பெயர் \| ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ. \| சதவீதம் \|<br>\|---\|---\|---\|---\|<br>\| 1 \| 2 \| 3 \| 4 \|<br>\| 1. \| M/S.MONA SIGNS. \| 186436.00 \| மதிப்பீட்டு தொகை விலை \| | அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது. |

<table>
<tr><td></td><td colspan="2">

| | | | |
|---|---|---|---|
| | TRICHY | | விகிதம் (GST நீங்கலாக) |
| 2. | M/S.TT CONSTRUCTION. THIRUVONAM | 190000.00 | மதிப்பீட்டு தொகையை விட (+) 1.87 % அதிகம் (GST நீங்கலாக) |

<u>அலுவலககுறிப்பு</u> <u>(ந.க.எண்.12205/2024/எம்சிஇ5)</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள ரூ.186436.00/- என்ற மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.MONA SIGNS. TRICHY என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.

</td><td></td></tr>
<tr><td>28.03.2025</td><td>354.</td><td>

தஞ்சாவூர் மாநகராட்சியின் மாண்புமிகு துணை மேயர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு வாகனம் TN 49 CJ 9100 SCORPIO வாகனம் 60000 கிலோ மீட்டருக்கு மேல் கூடுதலாக இயக்கப்பட்டுள்ளதால், வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், Brake Show பழுதடைந்துள்ளதை புதிதாக மாற்றுதல் மற்றும் இதர பழுது பணிகளை மேற்கொள்ளவதற்கு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்திலேயே ஆயில் சர்வீஸ் மற்றும் பழுது பணிகள் மேற்கொண்ட வகையில் M/S.SRS CARS PVT LTD, THANJAVUR என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகையாக ரூ.41801/- (ரூபாய் நாற்பத்தி ஒன்றாயிரத்து எண்ணூற்றி ஒன்று மட்டும்) வரப்பெற்றுள்ளது, மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u> <u>(ந.க.எண்.18342/2023/எம்சிஇ5)</u>

1) மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.41801/- (ரூபாய் நாற்பத்தி ஒன்றாயிரத்து எண்ணூற்றி ஒன்று மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.

</td><td>அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.03.2025 | 355. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8, 15, 16,23க்குட்பட்ட வடக்குவீதி, மேலவீதி, தெற்குவீதி மற்றும் கீழவீதி ஆகிய சிமெண்ட் சாலைப்பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை ஆழ்இறங்கு குழிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளால் கழிவுநீர் ஆங்காங்கே வெளியேறி சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உருவாகிறது. மேலும் எதிர்வரும் 07.05.2025ம் தேதியன்று தஞ்சை பெருவுடையார் சித்திரை தேர்த்திருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, பொதுமக்கள் நலன்கருதியும் மற்றும் பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி பகுதிகளில் பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை ஆழ்இறங்கு குழிகளை உயர்த்தி கட்டும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/- க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.3087/2025/எம்சிஇ5</u>)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/- க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 356. | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை 748/2008/கு.வ2, நாள்.21.09.2009ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு வருடமும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்புகட்டணம் மற்றும் மேற்பார்வைக்கட்டணம் தொகை முந்தைய ஆண்டின் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1ம் தேதி முதல்). மேலும் விண்ணப்பப்படிவம் எந்த நிதி ஆண்டில் வழங்கப்பட்டு செலுத்தப்படுகிறதோ அந்த நிதி ஆண்டிற்கான தொகை வசூலிக்கப்படவேண்டும் என்பதற்கிணங்கவும், கீழ்க்கண்டுள்ள சாலைக்கட்டணம் மற்றும் மேற்பார்வைக்கட்டணம் 01.04.2024ல் நிர்ணயம் செய்துள்ளதனை வரும் நிதியாண்டில் 01.04.2025 முதல் 5 சதவீதம் கீழ்கண்டுள்ள பட்டியலில் உயர்த்தப்பட உள்ளது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

<u>சாலை சீரமைப்பு கட்டணம்</u>

| அளவு | கருங்கல் சல்லி சாலை ரூ. | | | தார்ச்சாலை ரூ. | | | சிமெண்ட் சாலை ரூ. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024-25ல் உள்ள தொகை | உயர்வு செய்யப் படும் அளவீடு | 2025-26ல் நிர்ணயம் செய்யப் படும் தொகை | 2024-25ல் உள்ள தொகை | உயர்வு செய்யப் படும் அளவீடு | 2025-26ல் நிர்ணயம் செய்யப் படும் தொகை | 2024-25ல் உள்ள தொகை | உயர்வு செய்யப் படும் அளவீடு | 2025-26ல் நிர்ணயம் செய்யப் படும் தொகை |
| 0-30 மீ நீளத்திற்கு | 2185 | 5% | 2294 | 4678 | 5% | 4912 | 5406 | 5% | 5676 |
| 30-90 மீ நீளத்திற்கு | 3418 | | 3589 | 5926 | | 6222 | 6651 | | 6984 |

<u>மேற்பார்வைக்கட்டணம்</u>

| அளவு | கருங்கல் சல்லி சாலை ரூ. | | | தார்ச்சாலை ரூ. | | | சிமெண்ட் சாலை ரூ. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024-25ல் உள்ள தொகை | உயர்வு செய்யப் படும் அளவீடு | 2025-26ல் நிர்ணயம் செய்யப் படும் தொகை | 2024-25ல் உள்ள தொகை | உயர்வு செய்யப் படும் அளவீடு | 2025-26ல் நிர்ணயம் செய்யப் படும் தொகை | 2024-25ல் உள்ள தொகை | உயர்வு செய்யப் படும் அளவீடு | 2025-26ல் நிர்ணயம் செய்யப் படும் தொகை |
| 0-30 மீ நீளத்திற்கு | 3842 | 5% | 4034 | 4590 | 5% | 4820 | 4809 | 5% | 5049 |
| 30-90 மீ நீளத்திற்கு | 9195 | | 9655 | 9949 | | 10446 | 10164 | | 10672 |

| | | |
|---|---|---|
| | மேற்படி குடிநீர் இணைப்புக்கான சாலைக்கட்டணம் மற்றும் மேற்பார்வைக்கட்டணம் வரும் நிதியாண்டு 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யவும் மேல்நடவடிக்கை தொடரவும், கணினியில் உள்ளீடு செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**அலுவலக குறிப்பு** (ந.க.எண்.11984/2007/எம்சிஇ5)<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 357. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.25ல் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால்கள் திறந்த வெளியில் இருப்பதினால் பொதுமக்கள் சிறுநீர் கழித்து செல்கின்றனர். இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் அதிகம் வீசுகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையும் உருவாகிறது. மேலும் மேற்படி பகுதி பொதுமக்கள் அதிகம் கூடும் இடம் என்பதினால் பொதுமக்கள் நலன்கருதி மழைநீர் வடிகால்களில் கான்கிரீட் சிலாப் போட்டு மூடுவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3,20,000/- க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**அலுவலக குறிப்பு** (ந.க.எண்.3221/2025/எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3,20,000/- க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 358. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சை பெருவுடையார் திருக்கோவிலில் 16.10.2024ம் தேதி முதல் பௌர்ணமி கிரிவலம் நடைபெற்று வருகிறது. மாதாமாதம் வரும் பௌர்ணமி தின கிரிவலத்தை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தகோடி பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு வருகின்றனர். எனவே மேற்படி பௌர்ணமி கிரிவலத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, தற்காலிக கழிப்பறை வசதி, கிரிவலப்பாதையை சுத்தப்படுத்துதல் மற்றும் மருத்துவ முகாம்கள் போன்ற அடிப்படை வசதிகளை 01.04.2025 முதல் 31.03.2026 வரையிலான ஒரு வருடத்திற்கு | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | பிரதி மாதம் பௌர்ணமி தினத்திற்கு ஏற்படுத்தி தரும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்தினை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** (<u>ந.க.எண்3181/2025/எம்சிஇ5</u>)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்கண்ட பணிக்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 359. | தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடர் எதிர்வரும் 14.03.2025 அன்று துவங்கி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து விவாதங்கள் நடைபெற உள்ளது. நிதிநிலை அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் நிகழ்வினை அனைத்து தரப்பினரும் அறிந்துகொள்ளும் வகையில் மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தலா இரண்டு இடங்களில் LED திரை, அமைக்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21335/2021/எம்2, நாள்.08.03.2025ன்படி தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய இரண்டு இடங்களில் LED திரை Speakar, நாற்காலி மற்றும் ஜெனரேட்டர் அமைத்து உரிய வசதிகள் ஏற்படுத்தி தரும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை ரூ.51,000/-க்கு (ரூபாய் ஐம்பத்தோராயிரம் மட்டும்) பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 பிரிவு 57(7)-ன் கீழ் பணி மேற்கொள்ளுவதற்கு அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | பதிவு செய்திட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**: (**ந.க.எண்.3182/2025/எம்சிஇ5**)<br><br>1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | | |
| 28.03.2025 | 360. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளின் எண்ணிக்கை 13986 ஆகும். இதில் 500 எண்ணிக்கையிலான SolarLight-கள் பொருத்தப்பட்டுள்ளதில் 238 எண்ணிக்கையிலான Solar Light-கள் எரியாமல் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள விளக்குகளை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக விளக்குகள் பொருத்துவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** (**ந.க.எண். 3771/2025/எம்சிஇ5**)<br>1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 361. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள மொத்த பாதாள சாக்கடை மேன்ஹோல் 12277 எண்ணம் மற்றும் 314.38 கி.மீ தூரத்திற்கு பாதாள சாக்கடை பிரதான குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளது இதில் சில்ட் மண் நிறைந்து அவ்வப்போது கழிவு நீர் வெளியேறுகிறது. இதனால் சுகாதார சீர் கேடு ஏற்படுகிறது. பொதுமக்கள் நலன்கருதி மேன்ஹோலில் உள்ள சில்ட் மண்ணை அகற்றுவதற்கு ஏற்கனவே உள்ள வாகனங்கள் பழுதடைந்துள்ளதால் தேவையான வாகனம் 1 எண்ணம் வாங்குவதற்கு அரசின் நிதி பெறுவதற்கும் அவசர அவசியம் கருதி தற்பொழுது பொது நிதியில் வாங்குவதற்கு தயார் செய்யபட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.55,00,000/- (ஐம்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u> (ந.க.எண். 3772 /2025/எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.55,00,000/- (ஐம்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | | |
| 28.03.2025 | 362. | தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலக கட்டிடத்தில், தரைதளம், முதல்தளம், இரண்டாம் தளம் என கட்டப்பட்டு ஒவ்வொரு பிரிவு வாரியாக அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் புதியதாக கணினி மற்றும் பிரிண்டர் அமைக்க வருவாய் பிரிவிற்கு 3- எண்ணம் கணினிகள் மற்றும் பிரிண்டர் மற்றும் பொறியியல் பிரிவிற்கு 2- எண்ணம் கணினிகள் மற்றும் பிரிண்டர் மற்றும் நகர் நல பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்வதற்காக 4- எண்ணம் கணிணிகள், பிரிண்டர் ஆக மொத்த 9 எண்ணிக்கையிலான கணிணிகள், 3-எண்ணிக்கையிலான பிரிண்டர்கள் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/-க்கு (பத்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u>:- (ந.க.எண். 3773 /2025/எம்சிஇ5)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/- (பத்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 363. | தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலக கட்டிடத்தில், தரைதளம், மேல்தளம், இரண்டாம் தளம் என கட்டப்பட்டு ஒவ்வொரு பிரிவு வாரியாக அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் வருவாய் பிரிவிற்கு 3- எண்ணம், தணிக்கை பிரிவிற்கு 4- எண்ணம், கணக்கர் பிரிவிற்கு 1- எண்ணம். குளிர்சாதனம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பிரிவிற்கு 8 எண்ணிக்கையிலான குளிர்சாதனங்களை (AC) புதிதாக அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

<table>
<tr><td></td><td></td><td>உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,60,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u>:- <u>(ந.க.எண். 3770 /2025/எம்சிஇ5)</u><br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.5,60,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.03.2025</td><td>364.</td><td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் புதிய தெருவிளக்கு வசதி அமைத்து தரக்கோரி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. மேலும் முதலமைச்சரின் தனி பிரிவிலிருந்தும் தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்தி தரக்கோரி பல்வேறு புகார் மனுக்கள் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற மனுக்களின் அடிப்படையிலும் பொதுமக்களின் நலன் கருதியும் கீழ்க்கண்டுள்ள இடங்களில் புதிதாக 69-எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மற்றும் 6 எண்ணிக்கையிலான மின்கம்பங்கள் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை 2024 – 25 வருடத்திற்கு தயார் செய்யப்பட்ட ரூ.22,65,000/-க்கு (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்தி அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><table><tr><th>வ. எண்</th><th>தெருவிளக்கு / மின்கம்பம் அமைக்க வேண்டிய இடம்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்)</th></tr><tr><td>1.</td><td>மானோான் மணி நகர் பகுதியில் 7 மின் விளக்குகள்</td><td>2.00</td></tr><tr><td>2.</td><td>அண்ணா நகர் 4ம் தெரு சத்தியா நகர் 1 தெருவிளக்கு மின்கம்பம்</td><td>0.35</td></tr><tr><td>3.</td><td>வார்டு எண்.32 ராசி நகர் நாகை ரோடு பகுதியில் 2 தெரு விளக்குகள்</td><td>0.60</td></tr></table></td><td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4. | வார்டு எண்.46 முனிசிபல் காலனி குடியிருப்பு நல சங்கம் பகுதியில் 4 தெருவிளக்கு | 1.50 | |
| | | 5. | வார்டு எண்.25 தத்தோஜியப்பா சந்து, நாகமர சந்து, தட்சணா பொடி சந்து இடங்களில் தெருவிளக்குகள் மற்றும் 5 மின் கம்பங்கள் | 1.75 | |
| | | 6. | வார்டு எண்.26 சங்கரப்ப வாத்தியார் சந்து பகுதியில் 3 தெருவிளக்குகள் | 0.90 | |
| | | 7. | வார்டு எண்.37 பாத்திமா நகர் மற்றும் முனியாண்டவர் காலனி பகுதிகளில் 5 தெருவிளக்குகள் | 1.60 | |
| | | 8. | வார்டு எண்.03 அப்சல் நகர் பகுதியில் 5 தெருவிளக்குகள் | 1.60 | |
| | | 9. | வார்டு எண். 34 வெட்டுக்காரத்தெரு, நேஷனல் மெடிக்கல் சந்து ஆகிய இடங்களில் 5 தெருவிளக்குகள் | 1.70 | |
| | | 10. | வார்டு எண்.13 கொடிக்காலூர் கரம்பை, அம்மாதோட்டம் ஆகிய பகுதிகளில் 5 தெருவிளக்குகள் | 1.80 | |
| | | 11. | வார்டு எண்.19 ஆனந்தம் நகர் சீனிவாசபுரம் பகுதியில் 7 – எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் | 2.00 | |
| | | 12. | வார்டு எண்.02 பூக்குளம் பகுதியில் புதிதாக தெருவிளக்கு அமைத்திட 4- எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் | 1.50 | |
| | | 13. | வார்டு எண்.01 ஸ்ரீராம் நகர் பள்ளியக்ரஹாரம் பகுதியில் 9 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் | 3.00 | |
| | | 14. | வார்டு எண்.23 கிருஷ்ணா ராயர் சந்து பகுதியில் 2 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் | 0.60 | |
| | | 15. | வார்டு எண்.28 ஆரோக்கிய மாதா கோவில் தெரு பகுதியில் 5 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் | 1.75 | |
| | | | **கூடுதல்** | **22.65** | |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலக குறிப்பு</u>:- (<u>ந.க.எண். 3767/2025/எம்சிஇ5</u>)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2265000/-க்கு (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்தி அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 365. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 51 வரையிலான வார்டுகளில் பாதாள சாக்கடை தலைமை கழிவு நீரேற்று நிலையம் 5 மற்றும் நீருந்து நிலையங்கள் 14 எண்ணம் உள்ளன. இதில் அவ்வப்போது ஏற்படும் மின் மோட்டர்கள் மற்றும் பேனல் Board -களை பழுதுகளால் கழிவுநீர் வெளியேறி சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உருவாகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி கழிவு நீரேற்று நிலையங்களில் பழுது ஏற்படும் மோட்டர்களை சரி செய்யவும் மற்றும் 01.04.25 முதல் 31.03.26 வரை உள்ள (2025 – 26 ம் ஆண்டிற்கு) ஒரு வருடத்திற்கு புதிய மின் மோட்டர்களை வாங்குவதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> (<u>ந.க.எண். 3768 /2025/எம்சிஇ5</u>)<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-26ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 366. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07 சுண்ணாம்பு காளவாய் தெருவில் வரைபடத்தில் உள்ள போல் 5 மின் கம்பங்களுக்கு 5 தெருவிளக்கு மற்றும் மின் தடம் அமைத்து தர இதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.3663/2025/எம்சிஇ6)**<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28.03.2025 | 367. தஞ்சாவூர் மாநகராட்சி புதிய அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 160 KVA ஜெனரேட்டருக்கு மூன்றாவது Oil Service செய்யும் பணியினை Kirloskar Authrised Service Dealer ஆன M/S.Bharath Diesels, தஞ்சாவூர் என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.22,356/-க்கு (ரூபாய் இருபத்தி இரண்டாயிரத்து மூன்நூற்று ஜம்பத்தி ஆறு மட்டும்) மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** **(ந.க.எண்.6752/2021/எம்சிஇ6)**<br>1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 368. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் நகரம், சர்வே தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண். 1, பிளாக் 40, நகரளவு எண்கள். 1540, 1541 மற்றும் 1542ல் 6129.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்வதற்கு அனுமதி கோரி திரு.செல்லப்பெருமாள் என்பவர் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண். 5P2UUW2I (25661)/2024/Tha.Ma.3/2024/TCP, நாள். 29.04.2024-ல் ம.வ/த.உ.தி எண். SWP/14/2024, திட்ட அனுமதி எண். 33/2024 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் தென்வடலான (1) 60' அகல சாலையில் எஞ்சியுள்ள பகுதி 1626 ச.அடி பரப்பளவு இடம், (2) கிழமேலான 30' அகல சாலை (3) தென்வடலான 30' அகல சாலை, (4) கிழமேலான 33' அகல சாலை, (5) கிழ மேலான 23' அகல சாலை, (6) மூலை முடுக்குகள் 50 சதுரடி பரப்பளவு (7) பொது உபயோகம் (Public Purpose) 471.24 சதுரடி | ஒப்புதல் வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | பரப்பளவுள்ள இடம் (8) மின்சார வாரியத்திற்குண்டான இடம் 534.86 சதுரடி பரப்பளவு இடத்தையும், ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.16.07.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரில், மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண். 1452/2024- ன் மூலம் 22.04.2024ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது.<br>மேற்படி மனைப்பிரிவில் மனுதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பராமரிப்புக் கட்டணம் வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. ( பற்றுச் சீட்டு எண். 107/05/1/24-25/0015659, நாள். 05.02.2025)<br>எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில்நுட்ப ஒப்புதலின் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.4998/2024/எம்சிஎப்1)**<br>மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். | |
| 28.03.2025 | 369. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சேகரமாகும் குப்பைகளை மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகளை இவ்வலுவலக வாகனம் TN 49 BE 3687 மூலம் அரியலூர் ULTRA TECH சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி பணியில் ஈடுபடுத்தப்படும் வாகனம் TN 49 BE 3687 –க்கு எரிபொருள் நிரப்பிட ஆகும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** **( ந.க.எண்.2106/2009/எச்.8)**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று TN 49 BE 3687 என்ற வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பிட அனுமதி வழங்கிய அலுவலக நடவடிக்கைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். | | |
| 28.03.2025 | 370. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களைப் பிடித்து SPCA, தஞ்சாவூர் என்ற அமைப்பின் மூலம் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிக்சை செய்யப்பட்டும், வெறிநாய்க்கடி தடுப்பூசி செலுத்தப்பட்டும் குறிப்பிட்ட நாட்கள் பராமரிக்கப்பட்டு, நாய்களை மீண்டும் பிடிக்கப்பட்ட இடத்திலேயே கொண்டு சென்று விடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு நாய்களை பிடிக்க பயன்படுத்தப்பட்டு வரும் வலைகள் சேதமடைந்த நிலையில் உள்ளதனால் புதிதாக வலைகள் வாங்கி வழங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** (ந.க.எண். 9730/2008/எச்.8)<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். | அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்பட்டது. | |
| 28.03.2025 | 371. தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் M/S. SR ENTERPRISES, திருச்சி என்ற நிறுவனம் மூலம் 01.05.2023 முதல் அயல் ஒப்பந்தப்பணி அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் திடக்கழிவுகள் தரம் பிரித்து சேகரித்து நுண் உரமாக்கம் மையங்கள் மற்றும் கலவை உரக்கிடங்கில் ஒப்படைப்பு செய்யும் பணியை மேற்கொள்ள, மேற்படி நிறுவனத்திற்கும், இம்மாநகராட்சிக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, திடக்கழிவுகளை தரம் பிரித்து சேகரித்து நுண் உரமாக்க மையங்கள் மற்றும் உரக்கிடங்கில் ஒப்படைப்பு செய்வதற்கு 01.05.2025 முதல் 30.04.2026 வரை மெட்ரின் டன் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் தொகையை விட மேற்கண்ட நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. . | |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகையில் 10% உயர்த்தி தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகளின் முழு அளவிற்கு ஏற்றவாறும் செயல்திறன் அடிப்படையிலும் தொகை வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.16.00 (ரூபாய் பதினாறு கோடி மட்டும்) கோடிக்கு தொகை வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>__அலுவலக__ குறிப்பு (__ந.க.எண்.7799/2023/எச்.8__)<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாநகராட்சி 2025-26 பொது நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை மானிய தொகையிலிருந்து (SWM Tied Grant) வழங்கலாம். | |
| 28.03.2025 | 372. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், சந்தைகள் ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகள் நுண் உரமாக்க மையங்கள் மற்றும் உரக்கிடங்கில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. மேற்படி சேகரித்து வைக்கப்பட்டுள்ள மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகளை அறிவியல் பூர்வமாக அப்புறப்படுத்திட Expression of Interest அடிப்படையில் தகுதி வாய்ந்த நிறுவனங்களை தேர்வு செய்திடவும், அவ்வாறு தேர்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கு மாநகராட்சி சார்பாக ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த காலத்திற்கு மட்டும் இடம் ஒதுக்கீடு செய்து தரவும், தேவையான தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்தி தரவும், தேவையான கட்டமைப்புகளை நிறுவனத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்டும், மின்சாரக் கட்டணத்தை சம்மந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்டும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>** **<u>(ந.க.எண்.1358/2019/எச்.8)</u>**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | | |
| 28.03.2025 | 373. | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின்கடிதம் ந.க.எண்.24608/2022/EA1 நாள்.13.02.2024ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தற்கிணங்க இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகள், வணிக நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள், பொது மக்கள் அதிக அளவில் கூடும் சுற்றுலா தலங்கள் மற்றும் பொது இடங்களில் உருவாகும் திடக்கழிவுகளின் அளவு மற்றும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளின் அளவுகள் ஆகியவை குறித்தும், உருவாகும் மற்றும் சேகரிக்கப்படும் கழிவுகளின் வகைப்பாடு குறித்தும் (Characterization of waste) 15 நாட்கள் தொடர்ந்து கண்காணித்து விரிவான அறிக்கை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்படி பணி மேற்கொண்ட வகையில் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/-ஐ வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** **<u>(ந.க.எண்.7799/2023/எச்.8)</u>**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாநகராட்சி 2025-26 பொது நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை மானிய தொகையிலிருந்து (SWM Tied Grant) வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 374. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் பொது சுகாதார பிரிவு மூலம் தூய்மை பணிகளான தெருக்கூட்டுதல், கழிவு நீர் கால்வாய்கள் சுத்தம் செய்தல், பேருந்து நிலையங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல், சாலையோரங்களில் குவிந்துள்ள தூசு மண்களை அகற்றுதல், சாலையின் நடுப்பகுதியில் உள்ள குப்பை மண்ணை அகற்றுதல், தெருவோரங்களில் வளர்ந்துள்ள செடி, கொடிகளை அகற்றுதல், மாநகராட்சி பூங்காக்கள் மற்றும் தெருப்பகுதிகளில் உள்ள தேவையற்ற புல், பூண்டுகள், முள்மரங்களை வெட்டி அப்புறப்படுத்துதல் மற்றும் மாநகரில் நடைபெறும் விழாக்கள் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு சிறப்பு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்காக தளவாடப்பொருட்கள் (மண் வெட்டி, கைதகடு, சுரண்டி (கால்வாய் சுரண்டி), கடப்பாறை, அரிவாள், | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | பிரம்பு கூடை, கொக்கி, வேர்வெட்டி, விளக்கமாறு, பிகாஷ், மண் தள்ளும் பிரஷ், மிளார் (கூட்டுமார்)) வாங்கி வழங்கிடும் பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **(ந.க.எண்.3678/2025/எச்.8)**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025 – 2026 ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம். | |
| 28.03.2025 | 375. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் பணிபுரியும் நிரந்தர ஆண் தூய்மை பணியாளர்கள்- 152 நிரந்தர பெண் தூய்மை பணியாளர்கள் - 108 மொத்தம் - 260 தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் (மழை கோட், காலனிகள்-2 ஜோடி, கையுறை- 2ஜோடி, கம்பூட், முககவசம்) வாங்கி வழங்கிடும் பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **(ந.க.எண். 3680/2025/எச்.8)**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025 – 2026 ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 376. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர் நகரம், சர்வே வார்டு எண்.01, பிளாக் எண். 45, நகரளவு எண்கள். 1671/4, 1677/2-ல் 2680.00 ச.மீ இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்வதற்கு அனுமதி கோரி திருமதி. J.பானுப்பிரியா மற்றும் திரு.S.ரமேஷ் ஆகியோரால் விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண். FQ8ATGUW(30344)/2024/TD3/2024/TCP, நாள். 07.09.2024-ல் ம.வ/த.உ.தி எண். SWP/32/2024, திட்ட அனுமதி எண். 67/2024 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள 1வது ரோடு ஒழுங்கற்ற அளவுள்ள கிழமேல் ரோடு | ஒப்புதல் வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | 163.32 ச.மீ, 2-வது ரோடு 7.2 மீ அகல தென்வடலான ரோடு 435.11 ச.மீ, 3 வது ரோடு 7மீ அகல கிழமேல் ரோடு 292.08 ச.மீ, 4வது ரோடு ஒழுங்கற்ற வடிவிலான கிழமேல் ரோடு 36.86 ச.மீ, மூலைமுடுக்குகள் 10007.38 ச.அடி, பொது உபயோகம் (Public Purpose) 110.00 ச.அடி பரப்பளவுள்ள இடம் ஆகியவைகள் அரசாணை 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 16.07.2022-ன் படி மாநகராட்சி ஆணையர் பெயரிலும், மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட 110.11 ச.அடி பரப்பளவு இடத்தையும் மனுதாரரிடமிருந்து உதவி இயக்குநர் அவர்களால் ஆவண எண்.3199/2024-ன் மூலம் 12.08.2024-ம் தேதியில் தானமாக பெறப்பட்டுள்ளது.<br>மேற்படி மனைப்பிரிவில் மனுதாரரால் சாலைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் தன் சொந்த செலவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, உதவி இயக்குநர் அவர்களால் அளித்துள்ள தொழில்நுட்ப ஒப்புதலின் படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **(ந.க.எண். 13695/2024/MCF1)**<br>மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொறியியல் பிரிவில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். | |
| 28.03.2025 | 377. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் ஒரு சிலரால் பொது இடங்களில் அசுத்தம் செய்யப்படுகிறது. இதனால் பொது மக்கள் , உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. எனவே, மேற்படி இரண்டு பேருந்து நிலையங்களில் தேவைப்படும் இடங்களில் Human Body Sensor Camera பொருத்தும் | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

<table>
<tr><td></td><td></td><td>பணிக்கும், அதனை பராமரிப்பதற்கும் இதற்கான செலவினத் தொகையை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2023 ஆகியவற்றிற்குட்பட்டு மாநகராட்சியால் குறிப்பிடப்படும் 3 ஆண்டு காலத்திற்கு விளம்பர பலகை வைத்துக் கொள்ள விருப்பமுள்ள நபர்களின் பிரேரணைகள் <u>Expression of Interest</u> மூலம் பெற்று உரிய நடவடிக்கை எடுக்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு (ந.க.எண். 3739/2025/ எம்சிஎப்1)<br>1. மேற்படி இரண்டு பேருந்து நிலையங்களில் தேவைப்படும் இடங்களில் Human Body Sensor Camera பொருத்தும் பணிக்கும், அதனை பராமரிப்பதற்கும் இதற்கான செலவினத் தொகையை ஈடு செய்யும் வகையில் விளம்பர பலகை அமைத்துக் கொள்வதற்கு <u>Expression of Interest</u> அறிவிப்பு வழங்கி உரிய நடவடிக்கை எடுக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.03.2025</td><td>378.</td><td>தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்கண்ட சாலை மையத்திட்டுக்களில் (Centre Median) புல்வெளி அமைத்தும் குறுஞ்செடிகள் வைத்தும் பூங்கா அமைத்து அழகுபடுத்தவும், இரவு நேரங்களில் ஒளிரும் மின்விளக்குகள் அமைத்தும், தூய்மையாக பராமரிக்கவும், அதற்குண்டான செலவினத்தை ஈடு செய்யும் வகையில் எவ்வித விளம்பர கட்டணமும் இல்லாமல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2023 ஆகியவற்றிற்குட்பட்டு மாநகராட்சியால் குறிப்பிடப்படும் 3 ஆண்டு காலத்திற்கு விளம்பர பலகை வைத்துக் கொள்ள விருப்பமுள்ள நபர்களின் பிரேரணைகள் <u>Expression of Interest</u> மூலம் பெற்று உரிய நடவடிக்கை எடுக்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்</th><th>மையத்திட்டு அமைந்துள்ள இடம்</th><th>சொந்தமான துறை</th></tr><tr><td>1</td><td>ராஜா மிராசுதார் மருத்துவமனை சாலை மையத்திட்டு</td><td>தஞ்சாவூர் மாநகராட்சி</td></tr><tr><td>2</td><td>பெரிய கோவில் சாலை மையத்திட்டு</td><td>தஞ்சாவூர் மாநகராட்சி</td></tr><tr><td>3</td><td>மேம்பாலத்திற்கு கீழுள்ள மையத் திட்டு (சாந்தபிள்ளை கேட் கீழ்புறம் உள்ளது)</td><td>நெடுஞ்சாலைத்துறை</td></tr></table></td><td>அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 4 \| மேம்பாலம் கீழுள்ள பகுதி (சாந்தபிள்ளை கேட் மேல்புறம்) \| நெடுஞ்சாலைத்துறை<br>5 \| மருத்துவக் கல்லூரி சாலை \| நெடுஞ்சாலைத்துறை<br>6 \| சச்சிதானந்த மூப்பனார் ரோடு (Temple Tower Road) \| நெடுஞ்சாலைத்துறை<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** **<u>(ந.க.எண். 3590/2025/எம்சிஎப்1)</u>**<br>தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள், உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் பகுதியாக இருப்பதால் இதனை அழகுபடுத்தி பராமரிக்கவும், அதற்குண்டான செலவினத்தை ஈடு செய்யும் வகையில் எவ்வித விளம்பர கட்டணமும் இல்லாமல் உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு விளம்பரபலகைகள் வைத்துக் கொள்ளவும் விருப்பமுள்ள நபர்களின் பிரேரணைகள் பெற்று நடவடிக்கை எடுக்க மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.03.2025 | 379. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்கண்ட ரவுண்டானாக்களில் புல்வெளி அமைத்தும் குறுஞ்செடிகள் வைத்தும் பூங்கா அமைத்து அழகுபடுத்தவும், இரவு நேரங்களில் ஒளிரும் மின்விளக்குகள் அமைத்தும், மேலும் தேவைப்படும் இடங்களில் சிறிய நீரூற்று அமைத்தும், தூய்மையாக பராமரிக்கவும், அதற்குண்டான செலவினத்தை ஈடு செய்யும் வகையில் எவ்வித விளம்பர கட்டணமும் இல்லாமல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2023 ஆகியவற்றிற்குட்பட்டு மாநகராட்சியால் குறிப்பிடப்படும் 3 ஆண்டு காலத்திற்கு விளம்பரங்கள் செய்துகொள்ள விருப்பமுள்ள நபர்களின் பிரேரணைகள் <u>Expression of Interest</u> மூலம் பெற்று உரிய நடவடிக்கை எடுக்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br><br>**வ.எண்** \| **ரவுண்டானா அமைந்துள்ள இடம்** \| **பராமரிப்பு துறை**<br>1 \| பெரிய கோவில் ரோடு (புத்தாயிரம் பூங்கா) சாலையோர பூங்கா \| தஞ்சாவூர் மாநகராட்சி<br>2 \| சோழன் சிலை அருகில் உள்ள சாலை சந்திப்பு \| தஞ்சாவூர் மாநகராட்சி | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 3 | சீனிவாசபுரம் ரோடு & மேல வீதி சந்திப்பு (சிவகங்கை பூங்கா எதிரில்) | தஞ்சாவூர் மாநகராட்சி |
| 4 | கும்பகோணம் ரோடு மற்றும் டவுன் போலீஸ் ஸ்டேஷன் சந்திப்பு (CRC Depo அருகில்) | தஞ்சாவூர் மாநகராட்சி |
| 5 | கொண்டிராஜபாளையம் (வெள்ளைப்பிள்ளையார் கோவில் அருகில் ) (புதிதாக ஏற்படுத்தப்பட வேண்டும்) | தஞ்சாவூர் மாநகராட்சி |
| 6 | வல்லம் ரோடு ( பழைய வீட்டு வசதி வாரியம் மற்றும் டேனியல் தாமஸ் நகர் சந்திப்பு | நெடுஞ்சாலைத்துறை |
| 7 | மருத்துவக் கல்லூரி சாலை ( சிவாஜி நகர் மேம்பால இறக்கம்) | நெடுஞ்சாலைத்துறை |
| 8 | காந்திஜி ரோடு ( ஆற்றுப்பாலம் அருகில்) உள்ள சாலை சந்திப்பு | நெடுஞ்சாலைத்துறை |
| 9 | ரயில்வே நிலைய சாலை சந்திப்பு | நெடுஞ்சாலைத்துறை |
| 10 | சாந்தபிள்ளை கேட் | நெடுஞ்சாலைத்துறை |
| 11 | தொல்காப்பியர் சதுக்கம் | நெடுஞ்சாலைத்துறை |
| 12 | ரயில்வே மேம்பாலம் தென்புறம் | நெடுஞ்சாலைத்துறை |

<u>அலுவலக குறிப்பு</u> (<u>ந.க.எண். 3591/2025/எம்சிஎப்1)</u>

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் பகுதியாக இருப்பதால் ரவுண்டானாக்களில் புல்வெளி அமைத்தும் குறுஞ்செடிகள் வைத்தும் பூங்கா அமைத்து அழகுபடுத்தவும், இரவு நேரங்களில் ஒளிரும் மின் விளக்குகள் அமைத்தும், மேலும் தேவைப்படும் இடங்களில் சிறிய நீரூற்று

| | | | |
|---|---|---|---|
| | | அமைத்தும், தூய்மையாக பராமரிக்க விருப்பமுள்ள நபர்களின் பிரேரணைகள் பெற்று நடவடிக்கை எடுக்க மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.03.2025 | 380. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51வரை சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 355 எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு காவல் துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் கேமராக்களின் ஆண்டு பராமரிப்பிற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட வில்லை இதனால் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கவும் மற்றும் பராமரிப்பு பணி செய்திடவும் மிகவும் சீரமமாக உள்ளது. இப் பராமரிப்பு பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ஒரு ஆண்டிற்கு ரூ.25.00/-இலட்சம் ஆகும். தற்போது இம்மாநகராட்சியின் நிதி நிலைமையை சரியில்லாத காரணத்தினால் பராமரிப்பு பணியினை ஏற்க இயலாத நிலை உள்ளது. மேற்படி இடங்களில் விளம்பர பலகைகள் அமைக்க 1 சதுர மீட்டருக்கு சேவை வரி (GST -14%) உட்பட்ட ரூ.5130/- ஆகும். ஆகவே (CCTV Camera ) கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட 355 இடங்களில் விளம்பர பலகைகள் அமைக்க ஒரு ஆண்டு பாரமரிப்பிற்கு (355x5130) = ரூ. 18,21,150/- ஆகும். இத்தொகை கண்காணிப்பு கேமரா (CCTV Camera) ஆண்டு பராமரிப்பு செலவினத்தை விட ரூபாய் 6,78,820/- குறைவாகவே உள்ளதால் மேற்படி பணிக்கு EOI (Expression of Interest) மூலம் மேற்கொள்ளலாம் என பொறியியல் பிரிவில் குறிப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே இதன் படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2023 ஆகியவற்றிற்குட்பட்டு மாநகராட்சியால் குறிப்பிடப்படும் 3 ஆண்டு காலத்திற்கு விளம்பர பலகை வைத்துக் கொள்ள விருப்பமுள்ள நபர்களின் பிரேரணைகள் <u>Expression of Interest</u> மூலம் பெற்று உரிய நடவடிக்கை எடுக்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> (<u>ந.க.எண். 3702/2025/எம்.சி.எப்.1</u>)<br>1. பொறியியல் பிரிவின் குறிப்பின்படி, CCTV Camera பராமரிப்பதற்குண்டான தொகையை ஈடு செய்யும் வகையில் விளம்பர பலகை அமைத்துக் கொள்வதற்கு <u>Expression of Interest</u> அறிவிப்பு வழங்கி உரிய நடவடிக்கை எடுக்க மாமன்றம் அனுமதிக்கலாம். | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 28.03.2025 | 381. | தஞ்சாவூர் மாநகராட்சியில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்க மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தளம் வாரியாக கட்டிட அனுமதி கட்டணம் கட்டிட இடிபாடு அகற்றுதல் கட்டணம் கட்டிட பொருள் சேமிப்பு கட்டணம் மழைநீர் சேமிப்பு வைப்பு தொகை, உள்ளூர் திட்ட குழுமம் சேவை கட்டணம் மற்றும் இன்ன பிற கட்டணங்கள் ஏற்கெனவே மாமன்ற தீர்மான எண் 60 நாள் 27.06.2019ல் ஒப்புதல் பெறப்பட்டு வசூல் செய்யப்பட்டு வந்தது.<br>அரசாணை (ப) எண் 72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நீ.1) துறை, நாள் 05.02.2025ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளையும் அதன் நிலைக்கேற்ப மேற்படி கட்டணங்களை ஒருங்கிணைத்து சுய சான்றின் அடிப்படையில் அல்லாத கட்டிடங்களுக்கு அனுமதி வழங்க கட்டணங்களை வசூல் செய்யப்பட வேண்டுமென அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.<br>அதில் மேற்படி கட்டணங்கள் அனைத்தும் ஒருங்கிணைத்து மாநகராட்சிகள் நிலை I (தஞ்சாவூர் மாநகராட்சி) குடியிருப்பு கட்டுமானத்திற்கு சதுர மீட்டருக்கு ரூ. 800.00 (அ) ச,அடிக்கு ரூ.74.00 எனவும் குடியிருப்பில்லாத கட்டுமானத்திற்கு ச.மீ ரூ. 1000.00 (அ) ச.அடிக்கு ரூ.93.00 ஒருங்கிணைப்பு கட்டணங்களாக மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் எனவும் இதில் ஏதேனும் மாறுபாடுகள் செய்யப்பட வேண்டுமென்றால் நகராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதலுடனே செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் பாதாள சாக்கடை திட்ட வைப்பு தொகை கீழ்கண்டவாறு வசூலிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.<br>. |

| கட்டுமான பரப்பளவு | குடியிருப்பு கட்டுமானம் | குடியிருப்பு அல்லாத கட்டு மானம் |
|---|---|---|
| 3500 ச,அடிக்கு கீழ் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| 3501 – 10000 ச.அடி | ரூ. 15,000 | ரூ. 30,000 |
| 10001 ச.அடிக்கு மேல் | ரூ. 25,000 | ரூ. 50,000 |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட ஒருங்கிணைப்பு கட்டணங்களையும் குடியிருப்பு, குடியிருப்பு அல்லாத உத்தேச கட்டுமான பரப்பிற்கு ஏற்ப பாதாள சாக்கடை திட்ட வைப்பு தொகை வசூல் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ள அரசாணையினை செயல்படுத்திட மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **ந.க.எண்.6744/2010/எப்1**<br>சுய சான்றின் அடிப்படையில் அல்லாத கட்டிடங்களுக்கு உரிய கட்டணங்களை வசூல் செய்ய மேற்கண்ட அரசாணையின் படி நடவடிக்கை எடுக்கலாம். | |
| 28.03.2025 | 382. | தஞ்சாவூர் சுற்றுலாத்துறை அலுவலர் அவர்களின் 20.01.2025-ம் தேதிய கடிதத்தில் உலக சுற்றுலா ஸ்தலமான தஞ்சை பெருவுடையார் கோவிலின் சுற்றுப்புறத்தில் மேம்பாடு செய்வதற்கு இம்மாநகராட்சியின் தடையின்மை சான்று கோரப்பட்டுள்ளது.<br>மேற்படி கோவிலை சுற்றி மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய சட்ட விதிகளின்படி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**நிபந்தனைகள்** :<br>1. மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களில் எவ்வித சேதமும் ஏற்படுத்தக் கூடாது.<br>2. சுற்றுலா துறையால் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து விபரம் தெரிவிக்கப்பட வேண்டும்.<br>**அலுவலக குறிப்பு** ( **ந.க.எண்.811/2025/எம்சிஎப்3)**<br>1. சுற்றுலாத் துறைக்கு உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்கலாம். மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம். | அலுவலக குறிப்பை அங்கீகரிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 383. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்திற்கான PMSVANidhi திட்டத்தின் ஒரு பகுதியான SVANidhi Se - Samridhi திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்ட 2808 சாலையோர வியாபாரிகளின் பட்டியல் மத்திய அரசிடமிருந்து இணையதளத்தில் இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | அலுவலக குறிப்பை அங்கீகரிக்க தீர்மானிக்கப்படுகிறது. |

மேற்படி பயனாளிகளில் 30.11.2023 வரை 1005 குடும்ப நபர்களின் விபரங்கள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பயனாளிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை Profiling செய்வதற்கும் மற்றும் இணையதளத்தில் வரையறுக்கப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் 8 வகையான திட்டத்தில் இணைத்து வலைதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிக்கும் மாமன்றத் தீர்மானம் எண்.96, நாள். 19.07.2024-ல் ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | SRP CREATIONS & INFO SOLUTIONS<br>500, Housing Board, Selathampatti, Salem – 636 005. | 1) PMSVANidhi Se Samriddhi திட்டத்தின் கீழ் Profilling செய்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 48/- (GST நீங்கலாக)<br>2) மத்திய மற்றும் மாநில அரசின் 8 வகையான திட்டத்தில் பயனாளிகளை இணைத்து பதிவேற்றம் செய்யும் பணி நபர் ஒருவருக்கு ரூ. 5/-<br>(GST நீங்கலாக) ஆக கூடுதல் நபர் ஒருவருக்கு ரூ.53/- |
| 2 | VIKASINFOTECH,<br>42 T, V K Road, Ammapet, Salem | 1) PMSVANidhi Se Samriddhi திட்டத்தின் கீழ் Profilling செய்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 53/-<br>(GST நீங்கலாக)<br>2) மத்திய மற்றும் மாநில அரசின் 8 வகையான திட்டத்தில் பயனாளிகளை இணைத்து பதிவேற்றம் செய்யும் பணி நபர் ஒருவருக்கு ரூ. 7/- |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>(GST நீங்கலாக) ஆக கூடுதல் நபர் ஒருவருக்கு ரூ.60/-</td></tr>
<tr><td>3</td><td>ITECHNOSULUTIONS<br>152-3 Ram Nagar 2nd Cross, Meyyannur, Salem - 5</td><td>1) PMSVANidhi Se Samriddhi திட்டத்தின் கீழ் Profilling செய்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 61/-<br>(GST நீங்கலாக)<br>2) மத்திய மற்றும் மாநில அரசின் 8 வகையான திட்டத்தில் பயனாளிகளை இணைத்து பதிவேற்றம் செய்யும் பணி நபர் ஒருவருக்கு ரூ. 9/-<br>(GST நீங்கலாக) ஆக கூடுதல் நபர் ஒருவருக்கு ரூ.70/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண். 7276/2015/MCF5)</u><br>
1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வரிசை எண். 1-ல் கண்ட SRP CREATIONS & INFO SOLUTIONS நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமையை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.03.2025</td>
<td>384. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு பணிப்புரிந்து வரும் அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2025-2026 ஆம் நிதி ஆண்டில் 01.07.2025 முதல் 30.06.2026 வரை புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஒரு பணியாளருக்கு ரூ.3883/- வீதம் 439 பணியாளர்களுக்கு 3883X439=ரூ.17,04,637/- தொகை செலுத்த வேண்டியுள்ளதால் இதற்கான உத்தேச செலவினம் ரூ.18,00,000/- க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.8520/2016/பி3)</u><br>
1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. செலவினம் பொது நிதியில் ஏற்கலாம்.</td>
<td>அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>28.03.2025</td>
<td>385. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12079/2024/SS2, நாள்.06.02.2025ன்படி O&M DGF 2024-25 Phase-V திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படாத குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைத்து பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணிக்கு ரூ.158.00/- இலட்சத்திற்கு (நூற்றி ஐம்பத்தி எட்டு இலட்சம் மட்டும்) அனுமதி வழங்கப்பட்டு 07.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td></tr>
<tr><td>1.</td><td>திரு.S.கோபி, தஞ்சாவூர்</td><td>1,29,80,000.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (-)0.18% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.G.ஜீவா, தஞ்சாவூர்</td><td>1,38,60,000.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 6.18% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவக குறிப்பு</u> <u>(ந.க.எண்.566/2025/எம்சிஇ1)</u><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள (-) 0.18% குறைவாக ரூ. 1,29,80,000.00/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.கோபி, தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.</td>
<td>அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>28.03.2025</td>
<td>386. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சமுதாயக் கழிப்பறைகள் மற்றும் பொதுக் கழிப்பறைகள், (கட்டணக் கழிப்பறைகள் மற்றும் பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பறைகள் நீங்கலாக) ஆகியவற்றை அந்தந்த பகுதிகளில் இயங்கும் சிறப்பாக செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களை தேசிய நகர்புறவாழ்வாதார இயக்கத்தின் கீழ் பணியாற்றும் சமுதாய</td>
<td>அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அமைப்பாளரின் வழியாக தேர்வுசெய்து, மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் அல்லது EOI விளம்பரதாரர்கள் மூலமாக பராமரிக்கும் பணிக்கான உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** (ந.க.எண்.3254/2025/எச்8.)<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.03.2025 | 387. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களை தூய்மை செய்யும் பணி மற்றும் கோடை காலத்தில் உரக்கிடங்கில் ஏற்படும் தீ விபத்தை அணைக்கும் பணி மேற்கொள்வதற்கு நான்கு எண்ணிக்கையிலான HIGH PRESSURE WASHER 1800 W 120 BARS இயந்திரங்கள் மற்றும் நான்கு எண்ணிக்கையிலான HIGH PRESSURE WASHER 1800 W 140 BARS இயந்திரங்கள் வாங்கி வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் அவசர அவசியம் கருதி ONLINE-ல் விலை குறைவாக உள்ளதினால் ONLINE-ல் இயந்திரம் வாங்க மாமன்றத்தின் அனுமதியும் உத்தேச செலவினம் ரூ.60,000/-க்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** (ந.க.எண்.3679/2025/எச்.8)<br>1. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2025 – 2026ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2.மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொருட்கள் வாங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது. |
| 28.03.2025 | 388. | நமக்கு நாமே திட்டப் பணிகள் 2024-25ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19731/2024/தி2, நாள்.05.07.2024ன்படி, இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06 இராஜா கோரி சுடுகாட்டில் பராமரிப்பு (பழுது) பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50,00,000/-க்கு (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) 06.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் 2 | அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td>
ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td></tr>
<tr><td>1.</td><td>M/S.MKM CONSTRUCTION, THANJAVUR</td><td>4132444.26</td><td>மதிப்பீட்டு தொகையை விட<br>(-) 0.02% குறைவு<br>GST நீங்கலாக</td></tr>
<tr><td>2.</td><td>திரு.G.சதானந்தம், தஞ்சாவூர்</td><td>4310271.33</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 4.11% அதிகம்<br>GST நீங்கலாக</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு</u> <u>(ந.க.எண்.1505/2025/எம்சிஇ5)</u><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள (-) 0.02% குறைவாக ரூ. 4132444.26/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.MKM CONSTRUCTION, THANJAVUR என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.03.2025</td>
<td>389. தஞ்சாவூர் மாநகரில் பொது மக்களின் பொழுது போக்கு மையமாக சிவகங்கை பூங்கா மட்டுமே உள்ளது. மேலும், சுற்றுலா ஸ்தலமாக தஞ்சை பெருவுடையார் கோவில் உள்ளது. இதனால் பொது மக்கள் மற்றும் இளைஞர்களின் விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து பகுதிகளிலும் பூங்கா மற்றும் விளையாடுமிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, திரிபுரசுந்தரி நகர், நேதாஜி நகர் (புதிய வீட்டு வசதி வாரியம்), முல்லை நகர் (புதிய வீட்டு வசதி வாரியம்), சாந்தி நகர் ஆகிய 4 இடங்களில் பூங்கா மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஏற்படுத்தி பராமரிக்க ஏதுவாக மேற்படி இடங்களை 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.</td>
<td>அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு (ந.க.எண். 003775/2025/எம்சிஏ4)<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம். | | |
| 28.03.2025 | 390. | திரு.கே.கே.ஆர்.அய்யப்பன் 2 வது வார்டு மாமன்றஉறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>2 வது வட்டத்திற்குட்பட்ட பூக்குளம் புதுநகர் விரிவாக்க பகுதிக்கு குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை வசதி, சாலை வசதி, மின் விளக்குகள் அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர்:<br>திருகேகேஆர்அய்யப்பன்<br>வழி மொழிந்தவர்:<br>திருசு.செந்தமிழ்செல்வன்<br>நிறைவேறியது. |
| 28.03.2025 | 391. | திரு. ச. விஜயபாபு 7 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>7வது வட்டத்திற்குட்பட்ட சுண்ணாம்பு காலவாய் ரோட்டில் அமைந்துள்ள கல்வெட்டு பாலத்தை இடித்து விட்டு புதிதாக கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர்:<br>திரு. ச. விஜயபாபு<br>வழி மொழிந்தவர்:<br>திரு.ஜி. ஆனந்த்<br>நிறைவேறியது. . |
| 28.03.2025 | 392. | திரு. ஜி. ஆனந்த் 9 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>ஜுபிடர் திரையரங்கம் அருகில் இருந்து அண்ணா நூற்றாண்டு கட்டிடம் வரையிலும் பழைய பேருந்து நிலையம் பார்வையில் திருவள்ளுவர் பேருந்து நிலையம் நுழைவாயில் வரையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பெட்டிகள் அமைத்து குறைந்த முன்பணம், குறைந்த வாடகைக்கு கடைகள் அமைத்து தருதல் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர்:<br>திரு.ஜி. ஆனந்த்<br>வழி மொழிந்தவர்:<br>திரு.ச. விஜயபாபு<br>நிறைவேறியது. |
| 28.03.2025 | 393. | திருமதி. சொ. பாப்பா 14 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>ஆட்டுமந்தை தெரு, ஆட்டுமந்தை முஸ்லிம் தெரு, விசிறிக் காரத் தெரு, பழைய நெல்லு மண்டித் தெரு, ஆகிய தெருவில்தார் சாலைகள் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர்:<br>திருமதி. செ. பாப்பா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி. ஜெ. சுகாசினி<br>நிறைவேறியது. |
| 28.03.2025 | 394. | திருமதி. எ. ஸ்டெல்லா நேசமணி 29 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>கங்காணியர் தோட்டம் பகுதியில் ஆதாம் கால்வாய் மழைநீர் வடிகால் பாலத்துடன் 100 மீட்டர் அளவு | முன் மொழிந்தவர்:<br>திருமதி. எ.ஸ்டெல்லா நேசமணி |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டப்படாமல் உள்ள பாலம் கட்டுதல் மற்றும் தொடர்ச்சியாக பொது கழிவறை வரை உள்ள மண் சாலையை தார் சாலையாக அமைத்தல் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | வழி மொழிந்தவர்: திருமதி.வீ.செந்தில்குமாரி நிறைவேறியது. |
| 28.03.2025 | 395. | திருமதி. ம. உஷா 39 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம். காத்தூண் நகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள பள்ளிக்கு எதிர்புறம் அமைந்துள்ள மின் கம்பம் எண்-1 ஸ்விட்ச்-5 லிருந்து மின் கம்பம் (போஸ்ட்எண்) 2 ஸ்விட்ச் வரை மின்கம்பி அமைத்து தருதல் மற்றும் காமராஜ் நகர் 1, 2 ம் தெரு குறுக்கு ரோட்டில் மற்றும் அண்ணா நகர் 16 ம் தெருவில் புதிதாக மின் கம்பம் அமைத்தல் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர்: திருமதி. ம.உஷா வழி மொழிந்தவர்: திருமதி.ச.ரம்யா நிறைவேறியது- |

நாள் : 01.04.2024 ஒம்./சண்.இராமநாதன்,

இடம் : தஞ்சாவூர். மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**

**தஞ்சாவூர் மாநகராட்சி.**

பெறுநர்

1. மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)

" சி5- மாமன்றக்கூட்ட எழுத்தர்.

" அலுவலக விளம்பர பலகை.